DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II,ERODE.

CC.672/2019

Deposition of Witness PW.8

Name ஆறுமுகம் Caste

Father's Name Calling

Village Religion

Taluk Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.02.2021

மு.வி.

நான் தற்போது பாளையங்கோட்டையில் வசித்து வருகிறேன். 31.10.2009 ல் தென்காசி மாவட்ட பதிவாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. 17.09.2000 முதல் பிப்ரவரி 2005 வரை திருச்சிராப்பள்ளி இணைசார்பதிவாளர் கிரேடு 1/ மாவட்ட பதிவாளர் நிலையில் பணியாற்றி வந்தேன். 2002 ஆம் வருடத்தில் ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் அவர்கள் என்னிடம் பாகப்பிரிவினை பத்திரத்தை காட்டி இது உங்களது அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று கேட்டார். அந்த பாக பிரிவினை பத்திரம் 2191/1997 ஆகும் நான் என்அலுவலக ஆவணங்களை பார்வையிட்டு எங்களது அலுவலகத்தில் பத்திர எண். 2191/1997 ஆக பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணத்தின சான்றிட்ட நகலை ஆய்வாளரிடம் வழங்கினேன். ஆய்வாளர் என்னை விசாரித்து 31.10.2009 ஆம் தேதி அன்றையதினத்தில் எங்களது அலுவலகத்தில் பயன்பாட்டில் இருந்த ரப்பர் ஸ்டாம்பையும் (பத்திரத்தின் பின்புறமாக ஆவணம் பதிவு செய்ததாக காட்டம் ரப்பர் ஸ்டாம்பு என்று சாட்சி கூறுகிறார்) ஆய்வாளர் தன் வசம் எடுத்து வந்த பாக பிரிவினை பத்திர எண்.2191/1997 என்ற பத்திரத்தில் இருந்த ரப்பர் ஸ்டாம்பு சம்மந்தபப்ட்ட பகுதியையும் ஒப்பிட்டு பார்த்து அதில் மாறுபாடுகள் இருப்பதாக குறித்துக் கொண்டார். எங்களது அலுவலக பயன்பாட்டில் இருந்த ரப்பர் ஸ்டாம்பினை அச்சிட்டு என் கையொப்பமிட்டு ஆய்வாளர் ஆய்விற்காக வழங்கினேன். என்னை ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவு கா.ஆ. அவர்கள் விசாரித்து இது சம்மந்தமாக வாக்குமூலம் பதிவு

செய்தார்கள். நான் நடந்த விவரம் சொன்னேன்.

கு.வி.

1,3,4,7 எதிரிகள் தரப்பில் கு.வி.

நான் சார்பதிவாளர் அலுவலராக 1980-ல் நேரடி நியமனம் செய்யப்பட்டேன். அலுவலக முத்திரையானது செம்பினால் பொறிக்கப்பட்ட ஒன்று என்றால் சரிதான். கோபுர சீல் தான் அலுவலக முத்திரை ஆகும் அதுவே செம்பினால் செய்யப்பட்டு இருக்கும். இதர ரப்பர் ஸ்டாம்பு பொறுத்தவரை எங்கள் அலவலகம் மூலமே செய்து கொள்வோம். ரப்பர் ஸ்டாம்பு ஆனது தேவைப்படும் பட்சத்தில் அதனை நாங்கள் செய்து கொள்வோம் என்றால் சரிதான். ரப்பர் ஸ்டாம்பின் எழுத்துக்களின் வடிவத்தில் வித்தியாசம் இருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். அன்றைய தினத்தில் புழக்கத்தில் இருந்த ரப்பர் ஸ்டாம்பை பொறுத்தமட்டுமே என்னால் கருத்து கூற முடியும் என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இனங்க அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

போதிய வாய்ப்பு அளிக்கப்பட்ட போதும் 2ஆம் எதிரி தரப்பில் கு.வி. இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II,ERODE.

CC.672/2019

Deposition of Witness PW.5

| | | | |
|---|---|---|---|
| Name | மகேஷ் | Caste | |
| Father's Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.02.2021

மு.வி.

நான் திருப்பூரில் சிறுகுழுபட்டியில் வசித்து வருகிறேன். நான் சேல்ஸ்டேக்ஸ் கன்சல்ட்டிங்காக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் சண்முகசுந்தரம்(A1) மற்றும் சவுரிராஜன்(A7) ஆகிய இருவரையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் சண்முகசுந்தரம் மற்றும் சவுரிராஜன் ஆகிய இருவரும் எங்கள் அலுவலகத்திற்கு வந்து செல்வார்கள். என்னை 20 வருடத்திற்கு முன்பாக ஈரோடு DCB காவல் நிலையத்தில் இருந்து அழைத்ததின் பேரில் நானும் என் மனைவியும் கா.நிலையம் வந்த போது ஆஜர் எதிரி சண்முகசுந்தரம் பெடரல் வங்கியில் லோன் வாங்கியதை பற்றி விசாரித்தார்கள். எனக்கு ஆஜர் எதிரி சண்முகசுந்தரம் லோன் வாங்கிய விபரம் எனக்கு எதுவும் தெரியாது என்று கூறினேன். அதன் பின்னர் நீதிமன்ற சம்மன் பெற்று இன்றைய தினம் நான் நீதிமன்றத்தில் வந்து சாட்சியம் அளிக்கிறேன்.

கு.வி

3 ,4 மற்றும் 7 வது எதிரிகள் தரப்பில் கு.வி.

நான் எம்.ஏ. பொருளாதாரம் படித்துள்ளேன். நான் வருமான வரி விற்பனை வரி சம்மந்தப்பட்ட தனியாக சான்றிதழ் படிப்பு ஏதும் படிக்கவில்லை. நான் விற்பனை வரி, வருமான வரி சம்மந்தமாக கன்சல்ட்டிங் ஏதும் செய்யவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப அரசு தரப்பு வழக்கிற்குஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 ஆம் எதிரி தரப்பில் கு.வி.

நான் DCB கா.நிலையத்திற்கு அழைக்கப்பட்ட போது எதற்காகஅழைக்கப்பட்டேன் என்று எனக்குதெரியாது என்றால் சரிதான். டிசிபி கா.நி-ற்கு சென்ற பிறகுதான் என்ன விபரம் என்றுதெரிந்து கொண்டேன். போலீசார் கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப எனக்குசண்முகசுந்தரத்தினை தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

போதிய வாய்ப்பு அளிக்கப்பட்ட போதும் 2ஆம் எதிரி தரப்பில் கு.வி. இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II,ERODE.

CC.672/2019

Deposition of Witness PW.6

| | |
|---|---|
| Name உமாமகேஸ் | Caste |
| Father's Name | Calling |
| Village | Religion |
| Taluk | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.02.2021

மு.வி.

நான் திருப்பூர் மாவட்டம் சிறுபூலுவபட்டியில் வசித்து வருகிறேன். நான் என் கணவருடன் சேல்ஸ்டேக்ஸ் பயிற்சி செய்து கொண்டு இருக்கிறேன். ஆஜர் எதிரிகள் சண்முகசுந்தரம் மற்றும் சவுரிராஜன் எங்கள் அலுவலகத்திற்கு வந்து போகும் போது நான் அவர்களை பார்த்து இருக்கிறேன். எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது. ஈரோடு கா.நி-ல் இருந்து வரச்சொல்லி கேட்டுக் கொண்டதின் பேரில் நானும் என் கணவரும் நீண்ட காலத்திற்கு முன்பாக சென்ற போது போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகள் சண்முகசுந்தரம் மற்றும் சவுரிராஜனை தெரியுமா என்று கேட்டார்கள். நான் தெரியும் என்று கூறினேன். அவர்கள் எங்கள் அலுவலகத்திற்கு வந்து செல்லும் போது பார்த்துள்ளேன் என்று போலீசார் விசாரணையில் கூறினேன்.

கு.வி.

3,4 மற்றும் 7 எதிரிகள் தரப்பில் கு.வி.

நான் விற்பனை வரி, வருமான வரி சம்மந்தமாக கன்சல்ட்டிங் ஏதும் செய்யவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப அரசு தரப்பு வழக்கிற்குஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சண்முகசுந்தரம் மற்றும் சவுரிராஜன் ஆகியோர்களை தெரியும் என்று போலீசார் கேட்டுக் கொண்டதின் பேரில் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

1 ஆம் எதிரி தரப்பில் கு.வி.

அ.சா.5 என் கணவர் என்றால் சரிதான். நானும் என் கணவரும் 20 வருசத்திற்கு முன்பு ஈரோடு மாவட்ட கு.பி. கா.நி. சென்று இருந்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கை பற்றி

டிசிபி கா.நி. சென்ற பிறகு தான் தெரிந்து கொண்டேன். போலீசார் என்னிடம் சண்முக சுந்தரத்தினை தெரியுமா என்று கேட்டார்கள் தெரியும் என்று சொன்னேன். எனக்கு இந்த வழக்கை பற்றி தெரியாது எனறாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இனங்க வழக்கை பற்றி தெரியாது என்று சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

போதிய வாய்ப்பு அளிக்கப்பட்ட போதும் 2ஆம் எதிரி தரப்பில் கு.வி. இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II,ERODE.

CC.672/2019

Deposition of Witness PW.7

Name கணபதி Caste

Father's Name Calling

Village Religion

Taluk Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.02.2021

மு.வி.

நான் சிவகிரியில் வசித்து வருகிறேன். நான் கிராம நிர்வாக அலுவலராக இருந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது . 5.6.2003 ஆம் தேதி நான் ஈரோடு வட்ட அலுவலகத்திற்கு வந்த போது ஈரோடு மாவட்ட கு.பி. ஆய்வாளர் அவர்கள் என்னை இவ்வழக்கின் சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டதின் பேரில் நான் சாட்சியாக இருக்க ஒப்புக் கொண்டேன். போலி ஆவணம் தயாரித்தது சம்மந்தமாக சிவபிரகாசம் என்பவரை கைது செய்து இருந்தார்கள். கைது செய்த சிவபிரகாசிடம் ஒப்புதல் வாக்கு்முலம் பெறப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சி கையொப்பம் இட்டேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் **அ.த.சா.ஆ.14 ஆகும்.** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி சிவபிரகாசம் குற்றத்தை ஒப்புக் கொண்டு நான் தான் போலியாக தயாரித்த ஆவணத்தில் கையொப்பம் இட்டேன் என்று குற்றத்தை ஒப்புக் கொண்டார். மு.கன்னுசாமி ,மு.சுப்பிரமணியம் ஆகியோர்கள் கை யொப்பத்தை எதிரி சிவபிரகாசம் செய்ததாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். எதிரி சிவபிரகாசத்திடம் மாதிரி கையொப்பம் எங்கள் முன்னிலையில் பெற்றார்கள். அந்த மாதிரி கையொப்பத்தில் நான் முதலாவதாக சாட்சி கையொப்பம் இட்டேன். என்னுடைய முதல் சாட்சி கையொப்பம் **அ.த.சா.ஆ.**15 ஆகும். இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

கு.வி.

3.4.7 எதிரிகள் தரப்பில் கு.வி.

மேற்படி சிவபிரகாசத்தை கைது செய்யப்பட்ட போது தான் முதன்முறையாக பார்த்தேன். அதற்கு முன்பு பார்த்ததில்லை. கைது செய்யப்பட்ட நபரின் பெயர சிவபிரகாசம் என்பது போலீசார் சொல்லி தான் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். சிவபிரகாசம் என்பவரை நான் மு.வி. யில் சொன்ன இடத்தில் கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல . என் முன்னிலையில் எதிரி சிவபிரகாசம் எந்தவித மாதிரி கையொப்பமும் இடவில்லை என்றால் சரியல்ல. வழக்கமாக காவல் துறையில் இது மாதிரி சாட்சிகள் சொல்வதும், சாட்சி கையொப்பம் இடுவது வழக்கமான ஒன்று என்றால் சரியல்ல. நான் சொன்னமாதிரி அந்த தேதி, நேரத்தில் , இடத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், என் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் நான் சொன்னவிதத்தில் பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கிற்கு ஏற்றாற்போல் பின்னிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் சாட்சி கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல.

மேற்படி கு.வி-ஐ அப்படியே ஏற்றுக் கொள்வதாக 1 ஆம் எதிரி தரப்பில் மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

போதிய வாய்ப்பு அளிக்கப்பட்ட போதும் 2 ஆம் எதிரி தரப்பில் கு.வி. இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.